வாய்மையே வெல்லும்

# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண் 100, அண்ணாசாலை, கிண்டி, சென்னை 600 032
தொலைபேசி 044-22201337
மின்னஞ்சல் முகவரி ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

முன்னிலை: திரு மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண்.313/மா/2023
நாள் 25.08.2025

| | |
|---|---|
| திரு ஆர். மயில்சாமி<br>மதுரை | முறையீட்டு மனுதாரர் |
| செயற்பொறியாளர் (திட்டம்)<br>மதுரை மாநகராட்சி | எதிர் மனுதாரர் |

மதுரை, புதுவிளாங்குடி, செம்பருத்திநகர், அய்யப்பன் தெரு, பிளாட் எண் 5 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. ஆர்.மயில்சாமி என்பவரின் 17.08.2023 நாளிட்ட மனு இம்முறை மன்ற நடுவத்தில் 22.08.2023 அன்று பெறப்பட்டு 313/மா/2023 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

மதுரை, புதுவிளாங்குடி, செம்பருத்திநகர், அய்யப்பன் தெரு, பிளாட் எண் 5 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. ஆர்.மயில்சாமி தனது 17.08.2023 நாளிட்ட முறையீட்டு மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்.

> "மதுரை மாநகராட்சி மண்டலம் 2 (வடக்கு) வார்டு எண் 1 புதுவிளாங்குடி நேருஜீ மெயின் ரோடு (போஸ்) டீ கடை எதிரில் (யூனியன் பேங் காலனி கார்னர்) புதியதாக கட்டப்பட்டு வரும் வணிக வளாகம் தரைதளம் + முதல் தளமாக கட்டப்பட்டு வரும் கட்டிடம் சுமார் 20க்கு மேற்பட்ட கடைகள் கட்டப்பட்டு வருகிறது. இப்புதிய கட்டிடம் நான்கு புறமும் இடைவெளி விடாமல் சட்டத்திற்கு புறம்பாக கட்டிடம் கட்டப்பட்டு வருகிறது. இக்கட்டிடம் அனுமதிக்கு மாறாக கூடுதலாக கட்டிடம் கட்டப்பட்டு வருகிறது. மேலும் இப்புதிய கட்டிடத்திற்கு வணிக வளாகத்திற்கு வாகன நிறுத்துவதற்கு (Parking place) இடம் விடாமல் சட்டத்திற்கு புறம்பாக கட்டிடம் கட்டப்பட்டுவருகிறது. இவ்வணிக வளாகத்திற்கு வரும் பொதுமக்கள் தங்கள் வாகனங்களை ரோட்டு ஓரத்தில் நிறுத்துவதினால் அவ்வழியாக செல்லும் மாணவ, மாணவியர், சிறியவர்கள் முதல் பெரியவர்களும், பள்ளி பேருந்து, கல்லூரி பேருந்து, ஆம்புலன்ஸ், பயணிகள் பேருந்து, மற்றும் குடிநீர் வாகனங்கள் செல்வதற்கு மிகவும் இடையூர் எற்படும். இது குறித்து புகார் மனுவை 10.08.2023 தேதியில் பதிவு தபாலில் (RT424451487IN) செயற்பொறியாளர் (திட்டம்) மதுரை மாநகராட்சி மதுரை 2 அவர்களுக்கு அனுப்பியுள்ளேன். ஆனால், இன்று வரையிலும் நடவடிக்கை எடுக்காததினால், வணிக வளாக கட்டிட பணி மிகவும் துரிதமாக கட்டப்பட்டு வருகிறது. ஆரம்ப காலத்தில் கட்டிட பணியை தடுத்து நிறுத்தாவிட்டால், கட்டிட பணி முடிக்கப்பட்டால், நடவடிக்கை எடுப்பது மிகவும் சிரமம் ஆகும்.

புகார் மனு அளித்தும் கட்டுமான பணியை தடுத்து நிறுத்தாத சம்பந்தப்பட்ட மதுரை மாநகராட்சி அலுவலர்கள் மீது கடுமையான ஒழுங்கு நடவடிக்கை எடுத்தும், சட்டத்திற்கு புறம்பாக கட்டப்பட்டு வரும் புதிய வணிக வளாகத்திற்கு பணி நிறைவு சான்று வழங்காமல் தடுத்து நிறுத்தி உத்தரவிட்டும், நகர் ஊரமைப்புச்சட்டம் 1971ன் பிரிவுகள் 56 மற்றும் 57ன்படி உடன் படிக்கப்பட்ட பிரிவு 85ன்படி புதிய வணிக வளாக கட்டிடத்தின் மீது விரைவான நடவடிக்கை எடுக்க மதுரை மாநகராட்சி ஆணையருக்கு உத்தரவிடுமாறு மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவர் அவர்களை மிகவும் தாழ்மையுடனும் பணிவன்புடன் வேண்டிக் கொள்கிறேன்.'' என தெரிவித்துள்ளார்.

3. மேற்கண்ட மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு இம்முறைமன்ற நடுவ 25.10.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் மதுரை மாநகராட்சி மண்டலம் 2 (வடக்கு)–ன் உதவி ஆணையரிடம் கோரப்பட்டது.

4. மதுரை மாநகராட்சி நகர திட்டமிடுநர் கடித எண்.மதிஈ4/009889/2023 நாள் 10.06.2025–ல் தனது அறிக்கையினை பின்வருமாறு சமர்ப்பித்துள்ளார். அதில்–

"மனுதாரர் திரு.ஆர். மயில்சாமி என்பவர் மதுரை மாநகராட்சி மண்டலம் 2, வார்டு எண் 1–ல் புது விளாங்குடி நேதாஜி மெயின்ரோட்டில் கட்டப்பட்டுள்ள வணிக உபயோக கட்டிடத்தின் கட்டுமானத்தை தடுத்து நிறுத்துமாறு கோரப்பட்டது. மேற்படி வணிக கட்டிடத்திற்கு மதுரை மாநகராட்சியில் கட்டிட அனுமதி எண் ம1/286/21, நாள் 09.04.2021–ல் கட்டிட வரைபட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேலும் அனுமதிக்கு மாறுதலாக கட்டப்பட்டுள்ள கட்டிடத்திற்கு மாநகராட்சி மூலம் மதுரை மாநகராட்சி சட்டம் 282/296 (1)(2)–ன் கீழ் ம2ஈ1/001849/23, நாள் 23.03.2023–ன்படி அறிவிப்பு மற்றும் மதுரை மாநகராட்சி சட்டம் 296(3) பிரிவின்படி பிறப்பிக்கப்பட்ட ஊர்ஜித உத்தரவு நாள் 10.05.2023 சார்பு செய்யப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும், மேற்படி கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டு வருவாய்ப் பிரிவின் மூலம் வரிவிதிப்பு எண் 115/023/04135–ன்படி வரிவிதிப்பு செய்யப்பட்டு கட்டிட அனுமதிக்கு கூடுதலாக கட்டப்பட்ட கட்டிட அளவுகளுக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது என்ற விபரம் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.'' எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

5. இம் மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் நடுவத்தில் 17.6.2025 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 02.06.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

6. மனுதாரர் 17.06.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

"மதுரை மாநகராட்சி மண்டலம் 2 (வடக்கு) வார்டு எண் 1 புதுவிளாங்குடி நேருஜீ மெயின் ரோடு (போஸ்) டீ கடை எதிரில் (யூனியன் பேங் காலனி கார்னர்) புதியதாக கட்டப்பட்டு வரும் வணிக வளாகம் தரைதளம்+முதல்தளமாக கட்டப்பட்டு வரும் கட்டிடம் சுமார் 20க்கு மேற்பட்ட கடைகள் கட்டப்பட்டு வருகிறது. இப்புதிய கட்டிடம் நான்கு புறமும் இடைவெளி விடாமல் சட்டத்திற்கு புறம்பாக கட்டிடம் கட்டப்பட்டு வருகிறது. இக்கட்டிடம் அனுமதிக்கு மாறாக கூடுதலாக கட்டிடம் கட்டப்பட்டு வருகிறது. மேலும் இப்புதிய

கட்டிடத்திற்கு, வணிக வளாகத்திற்கு வாகன நிறுவத்துவதற்கு (parking place) இடம் விடாமல் சட்டத்திற்கு புறம்பாக கட்டிடம் கட்டப்பட்டு வருகிறது. இவ்வணிக வளாகத்திற்கு வரும் பொதுமக்கள் தங்கள் வாகனங்களை ரோட்டு ஓரத்தில் நிறுத்துவதினால் அவ்வழியாக செல்லும் மாணவ, மாணவியர், சிறியவர்கள் முதல் பெரியவர்களும், பள்ளி பேருந்து, கல்லூரி பேருந்து, ஆம்புலன்ஸ், பயணிகள் பேருந்து, மற்றும் குடிநீர் வாகனங்கள் செல்வதற்கு மிகவும் இடையூர் எற்படும். இது குறித்து புகார் மனுவை 10.08.2023ல் அளித்தும் மதுரை மாநகராட்சியால் நடவடிக்கை எடுக்காததால் இக்கட்டிடம் முழுமையாக தற்போது கட்டப்பட்டுள்ளது.

புகார் மனுஅளித்தும் கட்டுமான பணியை தடுத்து நிறத்தாத சம்பந்தப்பட்ட மதுரை மாநகராட்சி அலுவலர்கள் மீது கடுமையான ஒழுங்கு நடவடிக்கை எடுத்தும், சட்டத்திற்கு புறம்பாக கட்டப்பட்டு வரும் புதிய வணிக வளாகத்திற்கு பணி நிறைவு சான்று வழங்காமல் தடுத்து நிறுத்தி உத்தரவிட்டும், நகர் ஊரமைப்புச்சட்டம் 1971ன் பிரிவுகள் 56 மற்றும் 57ன்படி உடன்படிக்கப்பட்ட பிரிவு 85ன்படி புதிய வணிகவளாக கட்டிடத்தின் மீது விரைவான நடவடிக்கை எடுக்க மதுரை மாநகராட்சி ஆணையருக்கு உத்தரவிடுமாறு மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவர் அவர்களை மிகவும் தாழ்மையுடனும் பணிவன்புடன் வேண்டிக் கொள்கிறேன்.''

7. மதுரை மாநகராட்சி மண்டலம் 2ன் நகர திட்டமிடுநர் மற்றும் இளநிலை பொறியாளர் 17.06.2025 அன்றைய விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளனர்.

"மனுதாரர் குறிப்பிட்டுள்ள மதுரை மாநகராட்சி மண்டலம் 2 (வடக்கு) வார்டு எண் 1, புது விளாங்குடி நேருஜீ மெயின் ரோட்டில் கட்டப்பட்டுள்ள வணிக உபயோக கட்டிடத்திற்கு மதுரை மாநகராட்சியில் கட்டிட அனுமதி எண் 81286/21, நாள் 9.4.2021 ல் கட்டிட வரைபட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் அனுமதிக்கு மாறுதலாக கட்டப்பட்டுள்ள கட்டிடத்திற்கு மாநகராட்சி சட்டம் 282/296(1)(2)ன் கீழ் ம2ஈ1/001849/23 நாள் 23.03.2023–ன்படி அறிவிப்பு மற்றும் மதுரை மாநகராட்சி சட்டம் 296(3) பிரிவின்படி பிறப்பிக்கப்பட்ட ஊர்ஜித உத்தரவு நாள் 10.05.2023 சார்பு செய்யப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேற்படி அனுமதிக்கு மாறாக கட்டப்பட்ட மேற்கண்ட கட்டிடத்திற்கு வருவாய்ப்பிரிவின் மூலம் வரி விதிப்பு எண் 115/023/04135ன்படி வரி விதிப்பு செய்யப்பட்டு கட்டிட அனுமதிக்கு கூடுதலாக கட்டப்பட்ட கட்டிட அளவுகளுக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. மேலும் இதன் தொடர்ச்சியாக தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சிகளின் சட்டம் 1998ன்படி நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.''.

8. மனுதாரரால், புகாரில் தெரிவிக்கப்பட்ட கட்டிட உரிமையாளர் திரு. பாலமுருகன் அவர்களுக்கும், மனுதாரருக்கும் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 14.08.2025 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 30.07.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

9. 14.08.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் மனுதாரரும், எதிர்மனுதாரர் திரு. பாலமுருகன் என்பவரும் ஆஜராகவில்லை.

10. மனுதாரரின் முறையீட்டு மனு, வாக்குமூலம், மதுரை மாநகராட்சியின் நகர திட்டமிடுநரின் அறிக்கை மற்றும் மண்டலம் 2ன் நகர திட்டமிடுநர் மற்றும் இளநிலை பொறியாளர் ஆகியோரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்றத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன.

மனுதாரர், தனது மனு மற்றும் வாக்குமூலத்தில் மதுரை மாநகராட்சி மண்டலம் 2 (வடக்கு), வார்டு எண் 1, புதுவிளாங்குடி, நேருஜீ மெயின் ரோடு (போஸ்) டீ கடை எதிரில் (யூனியன் பேங் காலனி கார்னர்) வணிக வளாகம் தரைதளம் + முதல்தளமாக கட்டப்பட்டு வரும் கட்டிடத்தில் சுமார் 20க்கு மேற்பட்ட கடைகள் கட்டப்படுவதாகவும், இக்கட்டிடத்தில் நான்கு புறமும் இடைவெளி விடாமலும், அனுமதிக்கு மாறாக கூடுதலாக கட்டிடம் கட்டப்படுவதாகவும், அக்கட்டிடத்தில் வாகன நிறுத்துவதற்கு (parking place) இடம் விடாமலும், இவ்வணிக வளாகத்திற்கு வரும் பொதுமக்கள் தங்கள் வாகனங்களை ரோட்டு ஓரத்தில் நிறுத்துவதினால் மிகவும் இடையூறு ஏற்படுவதாகவும், இது குறித்து புகார் மனு அளித்தும் மதுரை மாநகராட்சியால் நடவடிக்கை எடுக்காததால் இக்கட்டிடம் முழுமையாக தற்போது கட்டப்பட்டுள்ளது எனவும், இக்கட்டுமான பணியை தடுத்து நிறுத்தாத சம்பந்தப்பட்ட மதுரை மாநகராட்சி அலுவலர்கள் மீது கடுமையான ஒழுங்கு நடவடிக்கை எடுத்தும், சட்டத்திற்கு புறம்பாக கட்டப்பட்டு வரும் புதிய வணிக வளாகத்திற்கு பணி நிறைவு சான்று வழங்காமல் தடுத்து நிறுத்தவும், மதுரை மாநகராட்சி ஆணையருக்கு உத்தரவிடுமாறு கோரியிருப்பது அறிய முடிகிறது.

மதுரை மாநகராட்சி மண்டலம் 2 (வடக்கு), வார்டு எண் 1, புதுவிளாங்குடி, நேருஜீ மெயின் ரோடு (போஸ்), டீ கடை எதிரில் (யூனியன் பேங் காலனி கார்னர்) புதியதாக கட்டப்பட்ட வணிக உபயோக கட்டிடத்திற்கு மதுரை மாநகராட்சியால் கட்டிட அனுமதி மற்றும் கட்டிட வரைபட அனுமதி வழங்கப்பட்டதற்கு மாறுதலாக கட்டப்பட்டுள்ள கட்டிடத்திற்கு மதுரை மாநகராட்சி சட்டம் பிரிவு 282/296(1)(2)ன் கீழ் ம2ஈ1/001849/23 நாள் 23.03.2023ன்படி அறிவிப்பு மற்றும் மதுரை மாநகராட்சி சட்டம் பிரிவு 296(3)—ன்படி பிறப்பிக்கப்பட்ட ஊர்ஜித உத்தரவு நாள் 10.05.2023 சார்பு செய்யப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதும், மேற்படி அனுமதிக்கு மாறாகவும், கூடுதலாகவும் கட்டப்பட்ட கட்டிடத்திற்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது என்பதும், இதன் தொடர்ச்சியாக தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998ன்படி நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதும் மதுரை மாநகராட்சி நகர திட்டமிடுநரின் அறிக்கை மற்றும் மண்டலம் 2ன் நகர திட்டமிடுநர் மற்றும் இளநிலை பொறியாளர் ஆகியோரின் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், மதுரை மாநகராட்சி மண்டலம் 2 (வடக்கு), வார்டு எண் 1, புதுவிளாங்குடி, நேருஜீ மெயின் ரோடு (போஸ்), டீ கடை எதிரில் (யூனியன் பேங் காலனி கார்னர்) புதியதாக கட்டப்பட்ட வணிக வளாகம், கட்டிட வரைபட அனுமதிக்கு மாறாகவும், இடைவெளி விடாமலும் கட்டப்பட்டுள்ள கூடுதல் கட்டிடத்திற்கு 1971—ம் ஆண்டு மதுரை மாநகராட்சி சட்டம், பிரிவு 296(3)—ன்படி பிறப்பிக்கப்பட்ட ஊர்ஜித உத்தரவு, நாள் 10.05.2023 சார்வு செய்யப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் மதுரை மாநகராட்சி மண்டலம் 2—ன் அலுவலகத்தால் மேற்கண்ட அனுமதியின்றி கட்டப்பட்ட வணிக வளாக கட்டிடத்தின் மீது சட்டப்படியான தொடர் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இது மிகவும் வன்மையாக கண்டிக்கத்தக்கது. எனவே, மேற்கண்ட வணிக வளாக கட்டிடத்தின் உரிமையாளருக்கு 10.5.2023 நாளிட்ட தாக்கீது வழங்கப்பட்டு, இதுநாள் வரை தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998—ன்படி தொடர் நடவடிக்கை எடுக்காத சம்பந்தப்பட்ட மதுரை மாநகராட்சி மண்டலம் 2—ன் அலுவலர்களின் மீது துறை ரீதியான நடவடிக்கை எடுக்குமாறு, மதுரை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்றம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது. மேலும், மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் அனுமதியின்றி கட்டப்படும் கட்டிடங்கள் குறித்து

தெரிவித்துள்ள வழிகாட்டுதலின்படியும், தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998–ன்படியும் மேற்கண்ட வணிக வளாக கட்டிடத்தின் மீது தொடர் நடவடிக்கை மேற்கொள்ளவும், அவ்வாறு எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்த அறிக்கையினை, மதுரை மாநகராட்சி ஆணையருக்கு சமர்ப்பிக்குமாறும், மதுரை மாநகராட்சி செயற்பொறியாளர் (திட்டம்) அவர்களுக்கு உத்தரவிடுமாறு மதுரை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்றம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது.

2025–ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 25–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

(1) திரு. R. மயில்சாமி,
பிளாட் 5, அய்யப்பன் தெரு, செம்பருத்தி நகர்,
புதுவிளாங்குடி, மதுரை–625 018.

(2) ஆணையர்,
மதுரை மாநகராட்சி,
தல்லாகுளம்,
மதுரை–625 002.

3) நகர திட்டமிடுநர்,
மதுரை மாநகராட்சி,
தல்லாகுளம், மதுரை–625 002

4) உதவி ஆணையர்,
மண்டலம் 2 (வடக்கு),
மதுரை மாநகராட்சி,
மதுரை–625 002.

5) திரு. பாலமுருகன்,
R.S. No.204/1B,
கதவு எண் 10/5–2A/1, யூனியன் பேங் காலனி, 5வது தெரு,
மதுரை–625 018.

6) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75 சாந்தோம் நெஞ்சாலை
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை 600 028.

7) இணை இயக்குநர்/ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75 சாந்தோம் நெஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை 600 028.

<u>நகல்:</u>
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ.கோ / உதிரி.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

செயலாளர்.